[2020] 2 எஸ்.சி.ஆர். 870

தி/ள். நோலா ராம் டுலிசந்த் டால் மில்ஸ் மற்றும் ஒருவர்

–எதிர்–

இந்திய ஒன்றியம் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண் 10636/2010)

பிப்ரவரி 14, 2020

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா

ஏற்றுமதி – இறக்குமதி கொள்கை: அயல்நாட்டு வர்த்தக கொள்கை 2004–2009 – 2006–2007 க்கு அறிவிக்கப்பட்ட திட்டம், அந்த திட்டத்தின் கீழ், வரி சலுகை உரிமை பெறுவதற்கு ஏற்றுமதி சார்ந்த பிரிவுகள் (இஓயு) செய்யும் எற்றுமதி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. 01.04.2006 முதல் 31.03.2007 வரையான காலத்திற்கு பல்வேறு திட்டங்களுக்கு கீழ் பலன்களை பெற ஏற்றுமதி சார்ந்த நிறுவன பிரிவுகள் மேற்கொள்ளும் ஏற்றுமதிக்கு தகுதியில்லை என்பதை

தெளிவுபடுத்த 21.01.2009 தேதியிட்ட சுற்றிக்கை வெளியிடப்பட்டது. மேல்முறையீட்டாளர் கொத்தவரை கோந்து, கொத்தவரை சூரி மற்றம் தீவனம் ஆகியவற்றை தயாரிக்க/வர்த்தகம் செய்ய மற்றும் விற்கவும் 100% ஏற்றுமதி சார்ந்த பிரிவிலிருந்து கொத்தவரை கோந்து தூள் வங்குவதிலும் ஈடுபட்டு வந்தார். மேற்படி சுற்றறிக்கை 2004–2009 அயல்நாட்டு வர்த்தக கொள்கைக்கு முரண்பாடாக இருக்கிறது என்ற அடிப்படையில் அதனை எதிர்த்து மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் அந்த நீதிப்பேராணை மனுவை தள்ளுபடி செய்தது– தீர்வு: 21.01.2009 தேதியிட்ட சுற்றறிக்கை 2006–2007ம் வருடத்திற்கு அறிவிக்கப்பட்ட திட்டத்தினை மாற்றவோ திருத்தவோ செய்யவில்லை–விலக்கு பெற தகுதியில்லாத 100% ஏற்றுமதி சார்ந்த பிரிவுகள் அவர்களிடமிருந்து வாங்குபவர்கள் மூலமாக மறைமுகமாக பலன்களை பெறமுடியாது என்பதனை தெளிவுப்படுத்த மட்டுமே செய்கிறது – திட்டத்தை மாற்றுவதையும் திருத்துவதையும் தான் அரசிதழில் வெளியிடுவதன் மூலம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும் ஆனால் நிலுவையில் உள்ள திட்டத்தில் இருக்கும் தெளிவின்மையை அகற்றுவதற்கான தெளிவாக்கத்திற்கு இல்லை– இந்த திட்டத்தின் நோக்கமானது சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அமைந்திருக்கும் 100% ஏற்றுமதி சார்ந்த பிரிவு அல்லது பிரிவுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படக்கூடாது

என்பதாகும். 100% ஏற்றுமதி சார்ந்த பிரிவின் மூலம் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதின் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் நோக்கம் மற்றும் இலக்கினை தோற்கடிக்க முடியாது – திட்டத்தின் சரத்து 3.8.5 ன்படி ஏற்றுமதி பொருட்களில் எவற்றிற்கு உரிமையினை கணக்கில் கொள்ள தகுதியில்லை என்பதை நேரத்திற்கு ஏற்றபடி குறிப்பிடும் உரிமையினை அரசு தக்கவைத்துள்ளது. எனவே 21.01.2009 தேதியிட்ட சுற்றறிக்கை எவ்விதத்திலும் சட்டவிரோதமானது என கூற முடியாது – மேல்முறையீட்டாளர் 100% EOU களின் ஏற்றுமதி சார்ந்த நிறுவனத்திடமிருந்து வாங்கியவர் என்பதால் 2006–2007 வருடத்திற்கான கொள்கையின் எதிர்நோக்கப்பட்ட நோக்கத்தை தவிர்க்க மேல்முறையீட்டாளரின் உபாயத்தை பயன்படுத்த முடியாது. அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம், 1992 பிரிவு 5.

மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்து நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரை:

தீர்வு: 1.1 அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1992 பிரிவு 5, அயல்நாட்டு வர்த்தக கொள்கையை அரசிதழில் அறிவிப்பதன் மூலம் விதிகளை

உருவாக்கி தெரிவிக்கவும் அதே போல் கொள்கையினை நேரத்திற்கு ஏற்றபடி திருத்தவும் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது. ஜனவரி 21, 2009 தேதியிட்ட சுற்றறிக்கையானது 2006–2007 வருடத்திற்காக அறிவிக்கப்பட்ட திட்டத்தை மாற்றவோ திருத்தவோ செய்யவில்லை. அது, விலக்கு பெற தகுதியில்லாத 100% எற்றமதி சார்ந்த பிரிவுகள் மறைமுகமாக அவர்களிடமிருந்து வாங்குபவர் மூலமாக பலன்களை பெறமுடியாது என்பதை தெளிவுபடுத்த மட்டுமே செய்கிறது. திட்டத்தில் கூறு 3.8.5–ன் படி ஏற்றுமதி பொருட்களில் எவற்றிக்கு உரிமையினை கணக்கில் எடுக்க தகுதியில்லை என்பதை நேரத்திற்கு ஏற்ப குறிப்பிடும் உரிமையினை அரசு தக்கவைத்துள்ளது. சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டத்தின்படி அரசானது பொது நலனில் அக்கறை கொண்டு அந்த உரிமையினை தக்கவைத்துள்ளதால் ஜனவரி 21, 2009 தேதியிட்ட சுற்றறிக்கையை எவ்வகையிலும் சட்ட விரோதமானதாக குறிப்பிட முடியாது [பத்தி 12] [877–இ–ஜி]

1.2 FMS– ல் வெளிப்படையான கூறு உள்ளது, ஆனால் நேரடி கட்டண பகுதிகள் திட்டம் (யோஜனா) தொடர்பான கூறு 3.8.2.2–ன் கீழ் விலக்கு பெறுவதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக ஏப்ரல் 2006 திட்டத்துடன் அறிவிக்கப்பட்ட FMS தொடர்பான திட்டத்தில் நேரடி கட்டண பகுதியில் அமைந்துள்ள பிரிவுகளுக்கு ஏற்றுமதியின்

பலன்களை இந்த திட்டம் நீக்குகிறது என்ற வாதத்தில் தகுதியில்லை. மேல்முறையீட்டாளர் 100% ஏற்றுமதி சார்ந்த பிரிவிலிருந்து வாங்கியவர் என்பதால் 2006–2007 வருடத்திற்கான கொள்கையின் மூலம் எதிர்நோக்கப்பட்ட நோக்கத்தினை தவிர்க்க மேல்முறையீட்டாளரின் உபாயத்தை பயன்படுத்த முடியாது. ஏற்றுமதி சார்ந்த நிறுவணம் ஏற்றுமதியின் பலனை நேரடியாக பெற அனுமதியில்லாத போது அந்த நிறுவணங்கள் இந்த திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்ய மேல்முறையீட்டாளரை பயன்படுத்த முடியாது.

[பத்தி 15][878–பி–சி]

அயல்நாட்டு வர்த்தகத்தின் தலைமை இயக்குநர் மற்றும் ஒருவர் –எதிர்– கனக் ஏற்றுமதி மற்றும் ஒருவர் (2016)2 எஸ்.சி.சி. 226: (2015) 15 எஸ்.சி.ஆர். 287– பார்வையிடப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவு</u>

[2015] 15 எஸ்.சி.ஆர். 287 குறிப்பிடப்பட்டது பத்தி 9

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு:

உரிமையியல் மேல்முறையீடு எண் 10636/2010

ஜெய்பூரில் இருக்கும் ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தின் நீதியர் ஆயம் உரிமையியல் நீதிப்பேராணை மனு எண் 13519/2009 இன் 18.10.2010 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 7257/2009, 10637/2010 மற்றும் 7233/2009.

<u>வழக்கறிஞர்கள்:–</u>

அரிஜித் பிரசாத், மூத்த வழக்கறிஞர், விவேக் ஷர்மா, அபிஷேக் ஆனந்த், இஷான்சரன், எம். பி. தேவாநாத், செல்வி. ராஷ்மி மல்கோத்ரா, செல்வி. கார்கி கண்ணா, திருமதி. அனில் காட்டியார் எ.என். அரோரா, அர்விந்த் குமார் ஷர்மா, பி. கிருஷ்ண பிரசாத், லலித் பாசின், செல்வி. நினா குப்தா, செல்வி. பாலக் சாதா, செல்வி. ருசிகா ஜோஷி, திருமதி. பினா குப்தா, ஆஜராகும் தரப்பினர்களுக்காக வழக்கறிஞர்கள்.

இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா, அவர்களால் பகரப்பட்டது.

<u>உரிமையியல் மேல்முறையீடு எண் 10636/2010</u>

1. மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவினை தள்ளுபடி செய்து ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்திரவினை எதிர்த்து இந்த மேல்முறையீடு. இந்த நீதிப்பேராணை மனு 2004–2009–ன் அயல்நாட்டு வர்த்தக கொள்கைக்கு[1] முரண்பாடாக அமைந்துள்ளது என்ற அடிப்படையில் ஜனவரி 21, 2009 தேதியிட்ட சுற்றறிக்கை எதிர்கப்பட்டுள்ளது. அத்தகைய கொள்கையானது அயல்நாட்டு வணிகச் (மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்துதல்) சட்டம், 1992[2] பிரிவு 5 ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அயல்நாட்டு வர்த்தக கொள்கை ஊக்கதொகை வழங்க பல்வேறு திட்டங்களை வழங்குகிறது.

2. இந்த வழக்கு பழங்கள், காய்கறிகள், பூக்கள், சிறு கானக விளைபொருட்கள், பால் பண்ணை, கோழி பண்ணை மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க ஊக்கத்தொகை வழங்கும் "விசேஷ் க்ரிஷி உபாஜ் யோஜ்னா[3]" தொடர்பானது. 2005–2006 ல் அறிவிக்கப்பட்ட

[1] சுருக்கமாக 'FTP'
[2] சுருக்கமாக 'சட்டம்'
[3] சுருக்கமாக 'திட்டம்'

திட்டத்தில் பின்வரும் ஏற்றுமதியினை இந்த திட்டத்தின் கீழ் வரி சலுகை தகுதிக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

3.8 " விசேஷ் க்ரிஷி உபாஜ் யோஜ்னா"

(சிறப்பு வேளாண் விளைபொருள் திட்டம்)

xx xx xx

3.8.2.2 கீழ்காணும் ஏற்றுமதிகள் இந்த திட்டத்தின் கீழ் வரி சலுகை தகுதிக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது

(அ) அயல்நாட்டு வணிகக் கொள்கை பத்தி 2.35–ல் கட்டுப்பட்ட சரக்குகளை இறக்குமதி ஏற்றுமதி செய்தல் அல்லது கப்பல் பரிமாற்றம் மூலம் ஏற்றுமதி செய்தல்

(ஆ) நிகர்நிலை ஏற்றுமதி (இலவச வெளிநாட்டு பரிவர்த்தனை மூலம் பெற்றிருந்தாலும் அந்நிய செலாவணி பரிவர்த்தனை (EEFC) கணக்கிலிருந்து கட்டணம் செலுத்தியிருந்தாலும் கூட).

3. எனினும் ஏப்ரல் 7, 2006 –ல் அறிவிக்கப்பட்ட 2006–2007 வருடத்திற்கான திட்டத்தில் கூறுகள் 3.8 மற்றும் 3.8.2.2 மாற்றப்பட்டுள்ளது. அந்த கூறுகள் கீழ்கண்டவாறு அமைந்துள்ளது.

3.8. விசேஷ் கிரிஷி மற்றும் கிராம் உத்யோக் யோஜ்னா

(சிறப்பு வேளாண் மற்றும் ஊரக தொழில் திட்டம்)

xx xx xx

3.8.2.2. பின்வரும் ஏற்றுமதிகள் இந்த திட்டத்தின் கீழ் வரி சலுகை தகுதிக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

(அ) அயல்நாட்டு வர்த்தக கொள்கையின் பத்தி 2.35 –ன் கீழ் கட்டுப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் ஏற்றுமதி அல்லது கப்பல் பரிவர்த்தனை மூலம் செய்யப்படும் ஏற்றுமதி

(ஆ) நிகர்நிலை ஏற்றுமதி

(இ) சிறப்பு பொருளாதார மண்டலத்தில் உள்ள நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த நிறுவன பிரிவுகளால் செய்யப்படும் ஏற்றுமதி

xx xx xx

3.8.5. ஏற்றுமதி பொருட்களில் உரிமையினை கணக்கில் கொள்ள தகுதியில்லாதவற்றை நேரத்திற்கு ஏற்ப குறிப்பிடும் உரிமையை பொது நலனில் அக்கரை கொண்டு அரசு தக்கவைத்து கொள்கிறது.

4. 2006–2007 வருடத்திற்கு அறிவிக்கப்பட்ட திட்டத்தை தெளிவுபடுத்த ஜனவரி 21, 2009 தேதியிட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டது சுற்றறிக்கையின் தொடர்புடைய பகுதி கீழ்கண்டவாறு அமைந்துள்ளது:

"

xx xx xx

2. எனினும், அயல்நாட்டு வர்த்தக கொள்கை ஆர். இ–2006–ல் (07.04.2006–ல் வெளியிடப்பட்டது) ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் செய்த ஏற்றுமதிகள் விசேஷ் கிரிஷி மற்றும் கிராம உத்யோக் யோஜனா திட்டதின் கீழான பலன்களுக்கு தகுதியற்றது [பத்தி 3.8.2.2 (இ) அறிமுகப்படுத்துவதின் மூலம்] மேலும் அயல்நாட்டு வர்த்தக கொள்கை ஆர். இ–2006–ல் சந்தையை மையப்படுத்திய திட்டம் (எப்.எம்.எஸ்) மற்றும் பொருட்களை மையப்படுத்திய திட்டம் (எப்.பி.எஸ்) என்ற இரண்டு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதே போன்ற விதிகள் சந்தையை மையப்படுத்திய திட்டத்திற்கு பத்தி 3.92.2 (ஆ)–ன் கீழும் பொருட்களை மையப்படுத்திய திட்டத்திற்கு பத்தி 3.10.2.2 (ஆ)–ன் கீழும் ஏற்படுத்தப்பட்டுள்ளது அதன்படி 1.4.2006 முதல் 31.03.2007 வரையிலான காலத்திற்கு ஏற்றுமதி சார்ந்த பிரிவு நிறுவனங்கள் (அல்லது நேரடி கட்டண பகுதியில்

உள்ள பிரிவுகள் மூலம்) செய்யும் ஏற்றுமதிக்கு விசேஷ் க்ரிஷி மற்றும் கிராம உத்யோக் யோஜனா (VKGUY), சந்தையை மையப்படுத்திய திட்டம் (FMS), பொருட்களை மையப்படுத்திய திட்டம் (FPS) ஆகியவற்றின் கீழான பலன்களை பெற தகுதியில்லை"

5. மேல்முறையீட்டாளர் கொத்தவரை கோந்து, கொத்தவரை சூரி மற்றும் தீவனம், சுத்திகரிக்கப்பட்ட ஸ்பிலிட்டுகள் மற்றும் கொத்தவரை கோந்து தூள் ஆகியவற்றை தயாரிக்க/ வர்த்தகம் செய்யவும் மற்றும் உள்நாட்டிலும் ஏற்றுமதி சந்தையிலும் விற்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். மேல்முறையீட்டாளர் தி/ள். நீல்காந்த் பாலிமர்ஸ் என்ற 100% ஏற்றுமதி சார்ந்த பிரிவிடமிருந்து கொத்தவரை கோந்து தூள் கொள்முதல் செய்வதாக வலியுறுத்துகிறார். அந்த விநியோகஸ்தரிடமிருந்து கொள்முதல் செய்வதற்கான காரணம் பல்வேறு மற்றும் வணிகம் சார்ந்த தன்மை கொண்டது ஆகும். நீதிப்பேராணை மனுவில் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

"12. மனுதாரர் நிறுவனமானது தி/ள்.நீல்காந்த் பாலிமர்ஸ் ஆதரவுபெறும் தயாரிப்பாளரிடமிருந்து விலை விபரபட்டியலின் கீழ் கொத்தவரை கோந்து தூள் கொள்முதல் செய்து அதனை மீண்டும் ஏற்றுமதி வணிகர் என்ற நிலையில் வணிக விலைப்பட்டியல், கப்பல் சரக்குப்பட்டியல், ஏற்றுமதிபட்டியல் ஆகியவற்றின் கீழ்

கன்ட்லா/ முந்த்ராவில் உள்ள சுங்கத்துறைமுகத்திலோ அல்லது கான்கார் ஜசிடி, ஜெய்பூர் ஆகிய இடங்களில் உள்ள சுங்கத்துறை துறைமுகம் மூலமாக ஏற்றுமதி செய்தார்.

6. மேல்முறையீட்டாளர்–நீதிப்பேராணை மனுதாரர், மற்றவைக்கிடையில் ஏப்ரல் 7, 2006–ல் அறிவிக்கப்பட்ட கொள்கைக்கு முரணாக இருப்பதாக கூறி சுற்றறிக்கையினை ரத்து செய்ய கோருகிறார். மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர், இந்த திட்டமானது சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டதால் அந்த திட்டதிற்கு சட்டப்படியான அதிகாரம் உள்ளதென்றும் எனவே அதனை ஒரு நிர்வாக அலுவலர் கேள்விக்குரிய சுற்றறிக்கையை வழங்குவதன் மூலம் திருத்தவோ மாற்றவோ முடியாது என வாதிட்டார். அரசு வெளியிட்ட சுற்றறிக்கை திட்டத்திற்கு முரணாக அமைந்திருப்பதால் அது அனுமதிக்கத்தக்கதல்ல. கற்றறிந்த வழக்கறிஞர் இந்த சட்டத்தின் பிரிவு 3 மற்றும் 5–ஐ குறிப்பிட்டார். அது கீழ் கண்டவாறு அமைந்துள்ளது:–

"3. **இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பான வகையங்களைச் செய்வதற்கான அதிகாரங்கள்:–** (1) மைய அரசாங்கமானது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக, இறக்குமதிகளுக்கு வசதி செய்து கொடுத்தும் ஏற்றுமதிகளை அதிகப்படுத்தியும்

அயல்நாட்டு வணிகத்தை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குறுத்துவதற்கும் வகை செய்யலாம்.

(2) மைய அரசாங்கமானது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக, அனைத்து நேர்வுகளிலும் அல்லது குறித்துரைக்கப்பட்ட நேர்வுகளின் வகைகளிலும் மற்றும் இந்த ஆணையினாலோ அல்லது அதன் வழியாலோ அளிக்கப்படும் விலக்களிப்புகள், எவையேனுமிருப்பின், அவற்றுக்கு உட்படும், சரக்குகள் சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் இறக்குமதியை அல்லது ஏற்றுமதியை தடை செய்வதற்கு, கட்டுப்படுத்துவதற்கு அல்லது பிறவாறு ஒழுங்குறுத்துவதற்கு வகை செய்யலாம்.

நிபந்தனையானது, சேவை மற்றும் தொழில்நுட்பம் வழங்குனர் அயல்நாட்டு வர்த்தக கொள்கையின் கீழ் பலன்களை பெற்றுக்கொண்டிருந்தாலோ அல்லது குறிப்பிட்ட சேவைகள் அல்லது குறிப்பிட்ட தொழில்நுட்பங்களை கையாளுபவராக இருந்தாலோ மட்டுமே சரக்குகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கு இந்த உட்பிரிவின் வாசகங்கள் பெருந்தும்.

(3) உட்பிரிவு (2)–இன் படியான ஆணை எதுவும் பொருந்துகிற சரக்குகள் அனைத்தும், சுங்கச் சட்டம், 1962 (52/1962)–இன் பிரிவு 11–இன் படி இறக்குமதி அல்லது ஏற்றுமதி தடை செய்யப்பட்டுள்ள சரக்குகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அந்தச் சட்டத்தின் வகையங்களும் அவ்வாறே செல்திறம் உடையன ஆகும்.

(4) மற்ற சட்டம், விதி, ஒழுங்குமுறை, அறிவிக்கை அல்லது உத்தரவிலிருக்கும் எவற்றிற்கும் பாதகமின்றி சரக்குகள் எவற்றிற்கும் ஏற்றுமதி அல்லது இறக்குமதிக்கு அனுமதிச்சீட்டோ உரிமமோ தேவையுமில்லை, இச்சட்டத்தின் கீழ் அல்லது இதனடியில் இயற்றப்பட்ட விதிகள் அல்லது உத்தரவின் கீழ் தேவை ஏற்பட்டாலன்றி ஏற்றுமதி அல்லது இறக்குமதியிலிருந்து எந்த சரக்குகளும் தடை செய்யப்படக் கூடாது.

xx xx xx

5. **ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கை**–மைய அரசாங்கமானது அவ்வப்போது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கையினை வகுத்து அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக வெளியிடலாம் மற்றும் அதே முறையில் அந்தக் கொள்கையில் திருத்தம் செய்யலாம்.

நிபந்தனையானது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை மூலம் சிறப்பு பொருளாதார மன்டலத்தை பொறுத்து சரக்குகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கை, அத்தகைய விலக்குகள், மாற்றங்கள் மற்றும் தழுவல்களுடன் பொருந்தும் என உத்தரவிடலாம்."

7. மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திட்டத்துடன் (யோஜனா) அறிவிக்கப்பட்ட சந்தையை மையப்படுத்திய திட்டத்தின்[4] கீழ் கிடைக்கும் ஏற்றுமதியின் பலன்களிலிருந்து உள்நாட்டு சுங்கவரி கட்டண பகுதியில்[5] உள்ள நிறுவனங்களை இந்த திட்டம் தவிர்க்கிறது என வாதிட்டார். எனவே சந்தையை மையப்படுத்திய திட்டத்தில் உள்நாட்டு சுங்கவரி கட்டண பகுதியில் செய்யப்படும் ஏற்றுமதியை குறிப்பிட்டு தவிர்க்கிறது. ஆனால் திட்டத்தில் (யோஜனா) அது போன்ற தவிர்ப்பு இல்லை. வருவாய்துறையானது இரண்டு திட்டங்களையும் வெவ்வேறாக பாவித்துள்ளது என்பது வருவாய்துறை ஒரே நாளில் அறிவித்த இரண்டு திட்டங்களுக்கு இடையில் வேறுபாடு உண்டாக்கியிருப்பது தெரிகிறது. எனவே சிறப்பு பொருளாதார பகுதியில் இருக்கும் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியை மையப்படுத்திய நிறுவனங்கள் மேற்கொள்ளும்

[4] சுருக்கமாக 'FMS'
[5] சுருக்கமாக 'DTA'

ஏற்றுமதி தவிர மற்றவைகளுக்கு ஏற்றுமதியின் பலன்கள் கிடைக்கத்தக்கது.

8. பத்தி 3.8.2.2–ல், ஏற்றுமதியை மையப்படுத்தி செயல்படும் நிறுவனங்கள், அல்லது சிறப்பு பொருளாதார பகுதியில் அமைந்திருக்கும் நிறுவனங்கள் ஆகியவை ஏற்றுமதி செய்தால் ஏற்றுமதியின் பலன்கள் அவைகளுக்கு கிடைக்கக்கூடியது இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். இத்தகைய நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஏற்றுமதிகளுக்கு மட்டுமே ஊக்கத்தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றும் மேல்முறையீட்டாளர்கள் ஏற்றுமதி சார்ந்த நிறுவனமோ அல்லது சிறப்பு பொருளாதார பகுதியில் உள்ள பிரிவின் அங்கமோ அல்ல என்றும் அந்த வாசகமானது ஏற்றுமதி சார்ந்த பிரிவினால் அல்லது சிறப்பு பொருளாதார பிரிவுகளால் செய்யப்படும் ஏற்றுமதி என்று தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் "மூலமாக" என்று இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிடப்பட்டது.

9. எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான முத்த வழக்கறிஞர் திரு. அரிஜித் பிரசாத், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டம், 1947 பிரிவு 5–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அயல்நாட்டு வர்த்தக கொள்கையை பொறுத்து ஒரு குறிப்பிட்ட திட்டத்தினை திருத்தவோ, மாற்றவோ அல்லது ரத்து செய்வதற்கு கூட அரசுக்கு உரிமை உள்ளது என்று தீர்வு காணப்பட்ட இந்த

நீதிமன்றத்தின் ***அயல்நாட்டு வர்த்தகத்தின் தலைமை இயக்குநர் மற்றும் ஒருவர் –எதிர்– கனக் ஏற்றுமதி மற்றும் ஒருவர்***[6] என அறிக்கயிடப்பட்ட தீர்ப்புரையில் கண்ட வழக்கினை குறிப்பிட்டார். இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்ப்பளித்தது:

> "105. அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரச்சனைக்குரிய ஊக்கத்தொகை திட்டமானது சலுகை அல்லது ஊக்கமளிப்பு தன்மையுடையது என்றும் அது மத்திய அரசாங்கத்தின் சிறப்புரிமை என்றும் எடுத்த எடுப்பிலேயே கூறலாம். அத்தகைய சிறப்புரிமையை வழங்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டியது அரசாங்கம் தான். அத்தகைய விலக்கு, சலுகை அல்லது ஊக்கத்தொகையினை எப்போது வேண்டுமானாலும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்பது சர்வசாதாரணமான சட்டமாகும். இவை அனைத்துமே அரசின் கொள்கை முடிவு என்ற வரம்பிற்குள் வரும் பிரச்சனைகளாகும். அத்தகைய ஊக்கத்தொகைகள் திரும்பபெறப்பட்டு அது பொது நலனில் செய்யப்பட்டது என்றும் காட்டப்பட்டால் அத்தகைய கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது. இந்நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளில் இவ்வாறு தீர்வு காணப்பட்டு இதுவே தற்போது நிறுவப்பட்ட மற்றும் நன்கு நிலைநாட்டப்பட்ட சட்ட கோட்பாடாகவும்

[6] (2016) 2 SCC 226

கருதப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் உறுதியுரை முரண்தடை கோட்பாடினையும் புறக்கணிக்க முடியாது.

xx xx xx

109. எனவே ஒரு குறிப்பிட்ட திட்டத்தை திருத்தவோ மாற்றம் செய்யவோ அல்லது ரத்து செய்யக்கூட அரசுக்கு அதிகாரம் உள்ளது என்பதை மறுக்க முடியாது. சிக்கலான பொருளாதார பிரச்சனைகளில் ஒவ்வொரு முடிவும் அவசியத்தின்படி அனுபவப்பூர்வமானதாகும். அது பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் அல்லது பட்டறிதல் முறையை பின்பற்றி அமைந்திருப்பது என்பதும் எனவே அதன் செல்லும் தன்மை கடுமையான முன்பரிசீலனையின் படியோ நேரடியுறைக்குள்ளான விதிமுறை பயன்படுத்தியோ பரிசோதிக்க முடியாது என்பது நிலைநிறுத்தப்பட்டதாகும். *பால்கோ தொழிலாளர்கள் சங்கம் –எதிர்– இந்திய ஒன்றியம் [பால்கோ தொழிலாளர்கள் சங்கம் –எதிர்– இந்திய ஒன்றியம்,* (2002) 2 எஸ்.சி.சி. 333] என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் பேச்சுரிமை, மத உரிமை போன்ற குடியுரிமை தொடர்பான சட்டங்களை விட பொருளாதாரம் சம்மந்தப்பட்ட நிர்வாக நடவடிக்கைகள் உட்பட உள்ள சட்டங்களை பரந்த கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என்றும் எந்த கோட்பாடுகளோ அல்லது நேரடி உறைக்குள்ளான விதிகளோ இல்லாத தீர்வு காண

முடியாதது போன்ற கூட்டுப்பிரச்சனைகளில் சட்டமன்றம் சில செயல்பாடுகள் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் ஏனென்றால் பிரச்சனைகளின் தன்மையை பொறுத்து சட்டமன்றத்திற்கு அதிகமான விரிவான அதிகாரம் வழங்க அனுமதி அளிக்க வேண்டும் என்றும் குறிப்பாக பொருளாதார விஷயம் தொடர்பான சட்டங்களில் சட்டமன்றத்தை அனுமதிக்க வேண்டும் என்பதும் உண்மையாகும், எனினும் கேள்வியானது வேறொரு நபருக்கு சாதகமாக சேர்ந்த உரிமையினை பறிக்கும் வகையில் முன்மேவும்படி செய்ய முடியுமா என்பதாகும்."

10. ஏப்ரல் 7, 2006 –ல் மேற்படி திட்டம் வெளியிடும் போது அதன் பலன்களிலிருந்து 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் குறிப்பாக விலக்கப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது. மேல்முறையீட்டாளர் 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்தவர். அவர் மேற்கொண்ட ஏற்றுமதிகளைப் பொறுத்து அந்த திட்டத்தின் கீழ் பலன்களை கோருகின்றார். 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் அந்த திட்டத்தின் கீழ் பலன்களை பெற தகுதி இல்லை என்றும் எனவே மேற்படி நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்தவர்களுக்கும் அந்த திட்டத்தின் பலன்களை பெற தகுதியில்லை என வாதிடப்பட்டது. நேரடியாக செய்யமுடியாததை மறைமுகமாக செய்யமுடியாது என

வாதிடப்பட்டது. அந்த திட்டத்தில் ஒரு தெளிவற்ற தன்மை இருந்ததால் அது தெளிவுபடுத்தப்பட்டது.

11. நாங்கள் தரப்பினர்களின் கற்றறிந்த வழக்கறிஞர்களை கேட்டறிந்தோம். இந்த மேல்முறையீட்டில் எவ்வித தகுதியும் இல்லையென காண்கிறோம்.

12. இச்சட்டத்தின் பிரிவு 5 அயல்நாட்டு வணிக கொள்கையை வகுத்து அரசிதழில் அறிவிப்பாணை மூலம் வெளியிட்டு அறிவிக்கவும் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது. அதே போல் நேரத்திற்கு ஏற்றபடி திருத்தம் செய்யவும் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குகிறது. ஜனவரி 21, 2009 தேதியிட்ட சுற்றறிக்கையானது 2006–2007 வருடத்திற்கு அறிவிக்கப்பட்ட திட்டத்தை மாற்றமோ திருத்தமோ செய்யவில்லை. அது விலக்கு பெற தகுதியில்லாத 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் மறைமுகமாக அவர்களிடமிருந்து பொருட்களை கொள்முதல் செய்வதின் மூலமாக அந்த திட்டத்தின் பலனை பயன்படுத்த முடியாது என்பதை தெளிவுபடுத்த மட்டுமே செய்கிறது. திட்டத்தின் மாற்றம் மற்றும் திருத்தம் மட்டுமே அரசிதழில் வெளியிடுவதின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர நடைமுறையில் இருக்கும் திட்டத்தில் இருக்கும் தெளிவற்ற தன்மையை நீக்குவதற்கான

தெளிவுறையை அல்ல. திட்டத்தின் கூறு 3.8.5 –ன் படி ஏற்றுமதிபொருட்களில் எவற்றிற்கு கணக்கில் கொள்ளும் உரிமைக்கு தகுதி இல்லை என்பதை நேரத்திற்கு ஏற்ப குறிப்பிடும் உரிமையை அரசு தக்கவைத்துள்ளது. சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டத்தின்படி அரசானது பொது நலனில் உரிமையினை தக்கவைத்துள்ளதால் ஜனவரி 21, 2009 தேதியிட்ட சுற்றிக்கை எவ்வகையிலும் சட்டவிரோதமானதென கூறமுடியாது.

13. ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளும் ஊக்கத்தொகை பெற உரிமையுள்ளது என்ற வாதத்தில் எந்த தகுதியும் இருப்பதாக நாங்கள் காணவில்லை. திட்டத்தின் நோக்கமானது 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கோ அல்லது சிறப்பு பொருளாதார மண்டலத்தில் உள்ள நிறுவனங்களுக்கோ ஊக்கத்தொகை வழங்கக்கூடாது என்பதாகும். 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் மூலம் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதின் முலம் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோலை தோற்கடிக்க முடியாது.

14. சந்தையை மையப்படுத்திய திட்டத்தில் வெளிப்படையான சரத்து உள்ளது என்றும் ஆனால் திட்டம் தொடர்பாக சரத்து 3.8.2.2. ன் கீழ் உள்நாட்டு கட்டணப்பகுதிகள் விலக்கு கோருவதிலிருந்து விலக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக ஏப்ரல் 2006 திட்டத்துடன் அறிவிக்கப்பட்ட சந்தை மையப்படுத்திய திட்டம் தொடர்பான திட்டத்தில் உள்நாட்டு கட்டண பகுதியில் அமைந்திருக்கும் நிறுவனங்களுக்கு ஏற்றுமதியின் பலன்களை விலக்குகிறது என்ற வாதத்தில் எந்த தகுதியும் இருப்பதாக நாங்கள் காணவில்லை. மேல்முறையீட்டாளர் 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்தவர் என்பதால் 2006–2007 வருடத்திற்கான கொள்கை மூலம் எதிர்நோக்கப்பட்ட இலக்கினை தவிர்க்க மேல்முறையீட்டாளரின் உபாயத்தை பயன்படுத்த முடியாது. ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் ஏற்றுமதியின் பலன்களை கோர அவர்களுக்கு நேரடியாக அனுமதி இல்லாத போது மேல்முறையீட்டாளர்களை ஏற்றுமதிக்கு பயன்படுத்த முடியாது என்றும் நாங்கள் காண்கிறோம்.

15. இதன் விளைவாக நாங்கள் இந்த மேல்முறையீட்டில் தகுதி எதுவும் காணவில்லை. எனவே அது தள்ளுபடி செய்யப்படுகிறது.

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 10637/2010

16. மேல்முறையீட்டாளர் 100% ஏற்றுமதி சார்ந்த நிறுவனம். அத்தகைய ஏற்றுமதி சார்ந்த நிறுவனம் அந்த திட்டத்திலிருந்து பத்தி 3.8.2.2. ன் படி குறிப்பிட்டு விலக்கப்பட்டுள்ளதால் இந்த மேல்முறையீட்டில் தகுதி எதுவும் இருப்பதாக நாங்கள் காணவில்லை. எனவே அது தள்ளுபடி செய்யப்படுகிறது

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 7233/2009 மற்றும் 7257/2009

17. 100% ஏற்றுமதி நிறுவனங்களுக்கு விலக்கு பெறும் பலனை மறுக்கும் " விசேஷ் கிரிஷி உபாஜ் யோஜனா" கொள்கையில் உள்ள மாற்றத்தினை அந்த கொள்கை எதிர்மனுதாரர்களை ஐந்து ஆண்டு காலத்திற்கு கட்டுபடுத்தும் என்ற அடிப்படையில் நேரடி கட்டண பகுதிகள் விலக்களிக்கப்பட்டுள்ளதால் அத்தகைய கொள்கை பாரபட்சமானது என்ற அடிப்படையிலும் மேல்முறையீட்டாளர் அதனை கேள்வி எழுப்பியுள்ளார். உயர்நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

> "மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்களை கேட்ட பிறகு கேள்விக்குரிய அறிவிப்பின் படி ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் வரிவிலக்கு மற்றும் வேளாண் துறையில்

உள்ள தீர்வை விலக்கு உட்பட அடிப்படை தேவைகளுக்கு அனுமதி பெறுதல் போன்ற சிறப்பு அந்தஸ்து அனுபவிப்பதால் மேலே கூறப்பட்ட பலன்களை திரும்பப்பெற அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளதால் 07.04.2006 தேதியிட்ட கேள்விக்குறிய அறிவிப்பில் (பின் இணைப்பு பக்கம் 7) நாங்கள் சட்ட முரண் எதுவும் காணவில்லை. மேலும் ஏற்றுமதியை நோக்கமாக கொண்ட நிறுவனங்கள் வருமான வரி பலன்கள் அனுபவிப்பதாலும் அவைகள் ஏற்றுமதியை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாலும் இத்தகைய பலன்கள் எதையும் அனுபவிக்காத நேரடி கட்டண பகுதியில் உள்ள நிறுவனங்களுக்கு சமமாக நடத்தமுடியாது. எனவே அந்த கொள்கையின் கீழ் உள்ள பலன்களை சிறப்பு பொருளாதார மண்டல பகுதிகளில் உள்ள நிறுவனம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு நீட்டிக்க முடியாது."

18. பதிவு செய்யப்பட்ட மேற்படி தீர்ப்பில் நாங்கள் தவறு எதுவும் காணவில்லை, அதன்படி இந்த மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டது

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."